# ஒட்டு மொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் - தமிழ்நாட்டில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

## தருமபுரி நிகழ்ச்சியில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**தருமபுரி, செப் 28 -**

**தருமபுரியில் நேற்று முன்தினம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான வங்கிப் பற்று அட்டைகளை பயனாளிகளுக்கு வழங்கி உரையாற்றிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஒட்டுமொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில், தமிழ்நாட்டில் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது என பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 500 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 பெறுவதற்கான வங்கிப் பற்று அட்டைகளை நேற்று முன்தினம் (26.09.2023) தருமபுரி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணுக்கிங்கே பெண் நிகர்" என்னும் சமத்துவப் பாதையில் பெண்களின் முன்னேற்றத்திற்கென எண்ணற்ற திட்டங்களை அறிவித்து, அவற்றை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வாழ்வாதாரத்தை முன்னேற்றவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கிடும் அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமாகவும், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள்.

1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், ஒட்டுமொத்த இந்தியாவும் திரும்பி பார்க்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

தற்போது தருமபுரி மாவட்டத்தில் இவ்விழாவின் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், 500 பயனாளிகளுக்கு இன்றைய தினம் வங்கிப் பற்று அட்டைகள் வழங்கப்படவுள்ளது. இத்தருமபுரி மாவட்டத்தில் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மகளிர் சுய உதவிக்குழுக்களை முதன்முதலில் தொடங்கிவைத்தார். தற்போது நமது முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாமினை இத் தருமபுரி மாவட்டத்தில் தான் தொடங்கி வைத்தார்கள். தற்பொழுது இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது.

இம்மாபெரும் திட்டத்தைப் பின்பற்றி அண்டை மாநிலங்களான தெலுங்கானா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படுவது குறித்தான வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பெண்களின் முன்னேற்றத்திற்கென முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை தொடர்ந்து தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.



### பெண்களின் முட்டுக்கட்டைகளை அகற்றும் அரசு!

தந்தை பெரியார் அவர்கள் பெண்ணுரிமை மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள் என்ன என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். பெண்கள் முன்னேற்றத்துக்கான அந்த முட்டுக்கட்டைகளை நம்முடைய அரசு எப்படி அகற்றி வருகிறது என்பதை இங்கு சொல்ல விரும்புகின்றேன்.

பெண்கள் முன்னேற்றம் கலாச்சார ரீதியாக, சட்ட ரீதியாக, பொருளாதார ரீதியாக என மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் போதும் பெண்கள் சுதந்திரமாக வாழ்வதோடு, முன்னேற்றமடைய முடியும் என்று தந்தை பெரியார் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் பணக்காரர்-ஏழை அடிமைத்தனத்தை விட, மேல் ஜாதி-கீழ் ஜாதி என்ற அடிமைத்தனத்தை விட, மிகவும் மோசமானது ஆண், பெண் அடிமைத்தனத்தை கலாச்சார ரீதியான தடை என்று சொல்லியிருக்கிறார்கள். பெண் அடிமைத்தனமான பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது, படிக்கக் கூடாது, வேலைக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடுகளை நீக்கி அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்து சென்றது முதலமைச்சர் தலைமையிலான அரசாகும்.

இரண்டாவதாக பெண்களுக்கு இருந்த சட்டரீதியான தடை என்பது, ஒரு தாய் வயிற்றிலே பிறந்தாலும் தந்தையுடைய சொத்தில், பாட்டனார் சொத்தில் பெண்களுக்கு உரிமை இல்லை என்ற நிலை. இந்நிலையை மாற்றும் விதமாக, பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை உண்டு என்று நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்ததன் காரணமாக இன்றைக்கு எல்லாப் பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை கிடைத்திருக்கின்றது.

### ஆண்களுக்கு சமமாக பெண்கள்!

அடுத்ததாக பொருளாதார ரீதியான தடை என்பது ஒரு பெண் சிறுமியாக இருக்கும் பொழுது பொருளாதார ரீதியாக, பணத்திற்காக தனது அப்பா, அம்மாவை எதிர்பார்க்க வேண்டும். அந்த பெண் வளர்ந்து பணத்திற்காக கணவனை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண், வயது முதிர்ந்த காலத்தில்தனதுமகனையோ,பேரனையோ எதிர்பார்த்திருக்கும் நிலைமை. இந்த நிலைமையை மாற்றி பெண்களும் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால், ஆண்களைப் போல தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்று, தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையில் சேர வேண்டும்.

எனவேதான் நமது முதலமைச்சர் தலைமையிலான அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றது. 'புதுமைப் பெண்' திட்டத்தின் மூலம் பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் செல்லும் மாணவியருக்கு மாதம் ரூபாய் ஆயிரம் அவர்களுடைய வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது. பெண்கள் படிப்பதற்காக அல்லது வேலைக்காக பயணம் செய்வதற்கு மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், வேலைக்கு செல்லக்கூடிய பெண்களுடைய சிரமத்தை குறைக்கக்கூடிய வகையில் 1 முதல் 5-ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்குமுதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவது மிக முக்கியமானது ஆகும். இத்திடத்தின் கீழ் 31,000 பள்ளிகளில், 17 மாணவ, மாணவியர்கள் பயனடைகின்றனர்.

### பெண்களின் உழைப்பிற்கு அங்கீகாரம்!

இத்திட்டத்திற்கெல்லாம் முதன்மையான திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் உள்ளது. இந்தத் திட்டத்திற்கு நம்முடைய தமிழ்நாடு இது உதவித்தொகை அல்ல. மகளிருக்கு கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய உரிமைத்தொகை. ஒரு அண்ணனாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருந்து பெண்களுடைய உழைப்பிற்கு இத்திட்டத்தின் மூலம் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

பெண்கள் கல்வி கற்று பொருளாதாரத்தில் உயர வேண்டும். அதே போல், பொது வாழ்க்கையிலும் ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான், உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்தி பெற முடியும். உள்ளாட்சிப் பதவிகளில் 50 சதவீத பெண்கள் வந்திருக்கிறார்கள். சென்னை மேயர், தாம்பரம் மேயர், கோயம்புத்தூர் மேயர் என்று உயர் பதவி எல்லாம் பெண்கள் வந்திருக்கின்றார்கள்.

பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக இருப்பது தான் பெண்ணுரிமைக்கான அடித்தளம். இந்த நேரத்தில் மகளிருக்கு ஒரு வேண்டுகோளை வைக்கின்றேன். தந்தை பெரியார் அவர்கள் சொன்னதுதான், மகளிர் நீங்கள் அனைவரும் முற்போக்காக சிந்திக்க வேண்டும், சுதந்திரமாகச் சிந்திக்க வேண்டும், படிக்க வேண்டும், அரசியலில் ஈடுபட வேண்டும், பகுத்தறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான், உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளும், முற்போக்காக, சுதந்திரமாகச் சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். இதன்மூலம் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமும் முன்னேற முடியும்.

ஆண்களை விட பெண்கள்தான் தங்களுடைய வருமானத்தில் பெரும் பகுதியை தங்களுடைய குடும்பத்திற்காக சேமிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றனர். எனவே கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகள் அனைவரும் இத்திட்டத்தினை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்வில் மென்மேலும் முன்னேற்றமடைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பி. வெங்கடேஸ்வரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அரசு செயலாளர் மரு. தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தடங்கம் பெ.சுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் முனைவர் பழனியப்பன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வேளாண் பொறியியல் துறையின் இயந்திரங்களைப் பயன்படுத்தும்

# சிறு, குறு விவசாயிகள் மானியத்தைப் பெற்று பயன்பெறுக!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

*சென்னை, செப். 28 -*

வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைப் பயன்படுத்திடும் சிறு, குறு விவசாயிகள் மானியத்தைப் பெற்று பயனடையுமாறு வேளாண்மை -உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தற்போது நிலவி வரும் வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையினைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு விதைப்பு முதல் அறுவடை முடிய அனைத்து சாகுபடிப் பணிகளையும் வேளாண் இயந்திரங்கள் மூலமாக மேற்கொள்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### இ-வாடகை மூலம் வேளாண் இயந்திரங்கள் முன்பதிவு

சொந்தமாக வேளாண் கருவிகளை வாங்கிப் பயன்படுத்த இயலாத விவசாயிகளின் வேளாண் இயந்திரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் மண் தள்ளும் இயந்திரம், டிராக்டர், மினி டிராக்டர், நெல் அறுவடை இயந்திரம், கரும்பு அறுவடை இயந்திரம் போன்ற 697 நில மேம்பாட்டு இயந்திரங்களும், சுழல் விசைத்துளைக் கருவி, பெர்குஷன் கருவி, சிறு விசைத்துளைக் கருவி போன்ற 101 சிறுபாசனத் திட்டக் கருவிகளும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன.



மேலும், உளிக்கலப்பை, ரோட்டவேட்டர், கொத்துக் கலப்பை, நிலம் சமன் செய்யும் கருவி, விதை விதைக்கும் கருவி, வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி, கரும்பு மற்றும் காய்கறி நாற்று நடவு செய்யும் கருவி, களையெடுக்கும் கருவி, பல்வகை பயிர் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற 40 வகையான 1,885 டிராக்டரால் இயங்கக்கூடிய வேளாண் கருவிகள் டிராக்டருடன் அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வியந்திரங்களை விவசாயிகள் தங்கள் இருப்பிடத்திலிருந்தபடியே முன் பதிவு செய்துகொள்ளும் வகையில், "இ-வாடகை" எனும் செயலி முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, இதன்மூலம் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

### வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்களைப் பயன்படுத்த மானியம்

தமிழ்நாட்டில் சொந்த நிலம் வைத்திருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு, வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை இ-வாடகை செயலி மூலம் பதிவு செய்து, நில மேம்பாடு, உழவு, விதைப்பு, அறுவடை, பண்ணைக் கழிவு மேலாண்மை போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக, தமிழக அரசு இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் 40 இலட்சம் ரூபாய் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இயந்திர சேவைக்கான மானியம்

வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை இ-வாடகை செயலியினை பயன்படுத்தி வாடகைக்குப் பெற்று, பணிகள் நிறைவடைந்த பின்னர், பணி முடிவுற்ற நிலப் பரப்பு துறை அலுவலர்களால் அளவீடு செய்யப்பட்டு, பின்னர் விவசாயி செலுத்திய மொத்த வாடகைத் தொகையில் 50 சதவிகித தொகை, பின்னேற்பு மானியமாக சம்பந்தப்பட்ட விவசாயியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

ஒரு விவசாயிக்கு 5 மணி நேரம் அல்லது 5 ஏக்கர், இவற்றுக்கான வாடகையில் எது குறைவோ அந்த வாடகை மானியமாக வழங்கப்படும்.

நன்செய் நிலமுடைய சிறு, குறு விவசாயிக்கு, அதிகபட்சமாக 2.5 ஏக்கருக்கு, ஒரு ஏக்கருக்கு ரூ.250/- வீதம், அதிகபட்சமாக ரூ.625/-வரை வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே மானியம் வழங்கப்படும்.

புன்செய் நிலமுடைய சிறு, குறு விவசாயிக்கு, அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு, ஒரு ஏக்கருக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.1250/- வரை வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே மானியம் வழங்கப்படும்.

### மானியம் பெற ஆன்லைன் மூலமாக விண்ணப்பம் அளிப்பதற்கான வழிமுறைகள் என்ன? என்னென்ன ஆவணங்கள் தேவை?

இத்திட்டத்தில் மானியம் பெற விரும்பும் விவசாயிகள், "உழவன் செயலியில்" இ-வாடகை சேவை மூலமாகவோ இணையதளம் https://mts.aed.tn.gov/evaadagai/ மூலமாகவோ தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை முன் பதிவு செய்து வாடகைத் தொகையை செலுத்த வேண்டும். அச்செயலியில் சிறு, குறு விவசாயிக்கான சான்றிதழ் மற்றும் விவரங்களைப் பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க வேண்டும். நிலத்தின் சிட்டா, புல வரைபடம், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழ், ஆதார் அட்டையின் நகல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் முன் பக்க நகல் ஆகிய ஆவணங்களை கள ஆய்வு செய்யும் வேளாண்மைப் பொறியியல் துறையின் அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அதிக மதிப்புள்ள வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத சிறு, குறு விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள இத்திட்டத்தில் வேளாண்மைப் பொறியியல்துறை இயந்திரங்களை இ-வாடகை செயலி மூலம் பதிவு செய்து, மானியத்தைப் பெற்று பயனடையுமாறு விவசாயிகள் அனைவரும் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் செம்பனார்கோயில் சம்பந்தம் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டியை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் குழு தலைவர் நந்தினிஸ்ரீதர், துணைத் தலைவர் பாஸ்கர் மற்றும் பலர் உள்ளனர்

---

வட சென்னை வளர்ச்சித் திட்டங்கள்:

# கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆய்வுக்கூட்டம்!

*சென்னை, செப். 28-*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (26.09.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலக கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி. கே.சேகர்பாபு தலைமையில் கிளாம்பாக கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்தும் மற்றும் வடசென்னை வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்திலிருந்து பேருந்துகள் போக்குவரத்து நெரிசலின்றி செல்வதற்காக சாலை அமைக்கும் பணிகளாக 1. அயனஞ்சேரி முதல் மீனாட்சிபுரம் வரையிலும் 2. சி.வே.கே.சாலை முதல் ஊரப்பாக்கம் - நல்லம்பாக்கம் வரையிலும் 3. ஆதனூர் முதல் மாடம்பாக்கம் வரையிலும் சாலை அமைக்கும் பணிகளையும், முடிச்சூரில் புதிதாக அமையவுள்ள ஆம்னி பேருந்து நிறுத்திமிடத்தில் நடைபெறும் பணிகள் குறித்தும், மழைநீர் வடிகால் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, பூங்காக்களில் நடைபெற்று வரும் பணிகள், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமைய உள்ள மருத்துவ வசதிகள் மற்றும் காவல் நிலையம் குறித்தும் அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்தார். இக்கூட்டத்தில் சென்னை நகரின் சீரான மற்றும் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக அடுத்த 3 ஆண்டுகளில் ரூ. 1000/ கோடி செலவில் 2023-2024-ஆம் ஆண்டின் பட்ஜெட் கூட்டத் தொடரில் வட சென்னை பகுதியினை மேம்படுத்த "வடசென்னை வளர்ச்சி திட்டம்" தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி சட்டசபையில் முன்மொழியப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் வட சென்னை பகுதியிலுள்ள உள்கட்டமைப்பு பற்றாக்குறை மற்றும் வளர்ச்சியில் உள்ள இடைவெளிகளை கண்டறியும் பொருட்டு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மூலம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பெருநகர் சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மகளிர் கிறிஸ்துவ கல்லூரி (WCC), சென்னை கிறிஸ்துவ கல்லூரி (MCC) மாணவ மாணவிகளால் முதன்மை விவரங்கள் சேகரிக்கும் பணியானது அமைச்சர் அவர்களால் ஆகஸ்டு மாதம் துவக்கி வைக்கப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நடத்தப்பட்ட முதன்மை விவரங்கள் சேகரிப்பு பணிகளையும், அவ்விவரங்களின் அடிப்படையில் கலந்தாலோசகர் நிறுவனத்தின் மூலம் மருத்துவம், கல்வி, பொது சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாடு, வாழ்கை தர மேம்பாடு, வடிகால் வசதி, குடிநீர் வழங்கல், சாலைகள் மற்றும் பிற பொது கட்டமைப்புகளில் உள்ள இடைவெளிகள் கண்டறியப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்யத் தேவையான திட்டங்களை இனங்காணும் பணிகளையும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

மேலும், இக்கூட்டத்தில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் சென்னை பெருநகர பகுதியில் உள்ள 26 சட்ட மன்றத் தொகுதிகளின் மேம்பாட் டிற்கான 34 அறிவிப்புகளுடன் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட 50 அறி விப்புகளையும் துரிதமாக செயல்படுத்தும்படி அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, எ.பாலசுப்ரமணியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு பல்நோக்கு மருத்துவர் முகாம் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி மற்றும் சென்னை கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி தலைமை வகித்தார். புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் முன்னிலை வகித்தார். மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி நிர்வாக இயக்குனர் டாக்டர் எஸ்.ஆர். அண்ணாமலை ரகுபதி மருத்துவ முகாமை துவக்கி வைத்தார், இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் முத்துகருப்பன் செய்திருந்தார். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, புதுக்கோட்டை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவரும், கறம்பக்குடி தெற்கு ஒன்றியச் செயலாளருமான தவ.பாஞ்சாலன். வெ.முத்துக்கிருஷ்ணன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் அமானுல்லா, துணை அமைப்பாளர்கள் தவ.பா.உதயசூரியன், டாக்டர் பிரபாகர தாஸ், புதுக்கோட்டை ஒன்றிய கழக நிர்வாகிகள் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.